விலை: 50.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : 16 viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 039 வள்ளுவர் ஆண்டு 2055 தை 13 சனிக்கிழமை (27.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# ஐ.எம்.எவ் ஒப்பந்தத்தை எவ்வாறு அமுலாக்குவது

## ஆராய வருமாறு கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## சண்டிலிப்பாயில் விபரீத முடிவெடுத்த யுவதி மரணம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பகுதியில் விபரீத முடிவெடுத்து யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் டச்சு வீதி சண்டிலிப்பாயைச் சேர்ந்த தேவதாஸ் கிருபாஜினி 04


## 12 இந்திய மீனவர்கள் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட12 இந்திய மீனவர்களும் நிபந்தனைகளுடன் நேற்று விடு 15

## எம்முடன் இணைந்து பயணிக்க சிறீதரன் முன்வர வேண்டும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன்



(யாழ்ப்பாணம்)

ஐக்கியத்தை விரும்பும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரன் எம்முடன் கைகோர்த்துப் பயணிப்பதற்கு வரவேற்கின்றோம் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித் 15

## ஜனாதிபதித் தேர்தல் உரிய தினத்தில் நடத்தப்படும்

### தேர்தல்கள் ஆணைக்குழு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலானது உரிய தினத்தில் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். 15

## முல்லையில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் வாகிசன் வீதியில் 15

## சிறீதரன் மாவீரர்களை நினைவுகூர்ந்தது அரசமைப்பை மீறும் செயலாகும்

### சரத் வீரசேகர தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று விடுதலைப் புலிகளை நினைவுகூர்ந்தமை அரசமைப்பை மீறும் செயலாகும் என ஸ்ரீ லங்கா பொதுஜன 15

## பாராளுமன்ற கூட்டத்தொடர் நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்பட்டது

### அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

பாராளுமன்ற கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி காலை 10.30 மணி வரை பாராளுமன்றத்தை ஒத்திவைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி 15

## யாழில் வாந்தி எடுத்த இளைஞன் திடீர் மரணம்

### உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் காய்ச்சலுடன் வாந்தி எடுத்த இளைஞன் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிந்துஜன் (வயது-19) என்ற 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ரொமேனியா நாட்டில் வேலைவாய்ப்பு

Delivery Boy, மேசன், மாபிள் பொருத்துனர், அலுமினியம் பொருத்துனர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. நேர்முகதேர்வின் பின்னர் குறைந்தளவு முற்பணத்துடன் விண்ணப்பிக்க முடியும். கனடாவிற்கு விசிட் விசா தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

**Hybrid International Hub(pvt) ltd Jaffna**
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)
**077 815 5920, 021 222 1265, 076 250 0098**
(C-8217)


# மரண அறிவித்தல்



## திருமதி மார்க்கண்டு நவமணி

விஜயமஹால் வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு நவமணி அவர்கள் கடந்த 24.01.2024 (புதன்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையர் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கோபால் - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லையர் - மயிலி தம்பதியரின் அன்பு மருமகளும் விஜயஸ்ரீ (ஓய்வுநிலை மின் பொறியியலாளர் - இ.மி.ச), விஜயராணி, விஜயகுமார் (ஓய்வுநிலை மின்னியலாளர் - யாழ். பல்கலைக்கழகம்), விஜயசேகர் (கனடா), விஜயமாலினி (தாதிய உத்தியோகத்தர் - பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
"விஜயமஹால்"
தர்மகுலசிங்க ச.ச.நிலையம்,
வல்வெட்டி.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(18774)


## தோட்ட வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். அச்சுவேலியில் அமைந்துள்ள விவசாய பண்ணைக்கு தோட்ட வேலை தெரிந்தவர்கள் தங்கிநின்று வேலை செய்யக் கூடிய ஆண்கள் தேவை.

தங்குமிடம், உணவு இலவசம்
(18783)
**076 739 0413**



## லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1790/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2150/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(18786)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615 6719**

Western Union WU MoneyGram. Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 8393 974**


# பெண் கைது

கட்டுநாயக்க விமான நிலையத் தின்வருகைமுனையத்தில் வைத்து பெண் ஒருவரை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று கைது செய்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் ஒரு கோடி 37 லட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை இலங்கைக்கு கொண்டு வந்த வர்த்தக பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதானை பிரதேசத்தில் வசிக்கும் 46 வயதுடைய இவர், வழமையாக விமானங்களில் செல்லும் வர்த்தகப் பெண் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ம-7)


## வேலை வாய்ப்பு

இலங்கையின் முதற்தர காப்புறுதி நிறுவனத்தில் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- காப்புறுதி ஆலோசகர்
  தகைமை – G.C.E O/L சித்தி
- குழு முகாமையாளர்
  தகைமை – G.C.E A/L சித்தி, ஒரு வருட அனுபவம்




### விசேட அனுகூலங்கள்

- வருமானத்தை அதிகரிக்கும் வாய்ப்பு
- உள்ளூர் சுற்றுலா
- வெளிநாட்டுச் சுற்றுலா
- பதவியுயர்வு வாய்ப்பு

குறிப்பு : பகுதிநேரம் வேலை செய்ய விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.சிப்பாரிசு செய்வோர் இருவரின் விபரங்களுடன் கூடிய சுயவிபரக்கோவையை **077 440 6075** என்ற தொலைபேசி இலக்கத்திற்கு Whatsapp செய்யவும்.
(18763)


# மரண அறிவித்தல்

பிறப்பு
21 - 10 - 1975



இறப்பு
24 - 01 - 2024

## திருமதி மார்க் வெஸ்லி அலன் கத்தறின் (கவிதா)

**( ஆசிரியர் - யாழ்/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் )**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் பாசையூர் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மார்க் வெஸ்லி அலன் கத்தறின் (கவிதா) அவர்கள் கடந்த 24.01.2024 ( புதன்கிழமை ) அன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னார் ஆரோக்கியராசா (சிங்கத்துரை) - அன்னமேரி (பத்தி) தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற மரியதாஸ் - யசிந்தா தம்பதியரின் அன்பு மருமகளும் மரியதாஸ் மார்க் வெஸ்லி (றஞ்சித்) அவர்களின் அன்பு மனைவியும் மார்க் பிரவீன் (மாணவன் - புனித பத்திரிசியார் கல்லூரி), மார்க் பிறின்ரன் (மாணவன் - புனித பத்திரிசியார் கல்லூரி), பொவிலின் (மாணவி - சுண்டுக்குழி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் டெனிஸ் (ஜெகன் - பிரான்ஸ்), அலன் விக்ரறின் (சீத்தா), அலன் கிறேசியா (பிறிந்தா - இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மார்க் அன்ரோ (நிமால்), சொபியா (பானுமதி) ஆகியோரின் அன்பு அண்ணியும் மார்க் எல்விஸ் (ரகு), ஜெனி (பிரான்ஸ்), ஜெயச்செல்வன் (றொய்சன் - ஆசிரியர்), கலின்ரன் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனியும் சியாமளா, கெங்கா ஆகியோரின் சகலியும் பகிதரன், டனுஜன் (பிரான்ஸ்), டெனிசா (பிரான்ஸ்), டிசோன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தேனுகாவின் அன்புச் சித்தியும் அனுஜன், அமெந்திக்கா, அஸ்விக்கா, அக்ஷிதா (இத்தாலி) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் சடங்கு நிகழ்வு இன்று (27.01.2024) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் தேவாலயத்தில் பூதவுடல் வைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 10/2, செபஸ்ரியன் வீதி,
பாசையூர்.
தகவல்:
குடும்பத்தினர்.
(18781)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி குலதீபன் பிருந்தா

( தாதிய உத்தியோகத்தர் – பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை )

திதி : சப்தமி

பிறப்பு : 12.01.1985
இறப்பு : 27.01.2019

இருபத்தேழாம் தேதி ஜனவரி
என் மனதில் ஏற்பட்டது கனவரி!

இன்று மலராது என்று நினைத்த செடியில்
மலர்ந்த என் தங்கை எனும் மலர் உதிர்ந்த தினம்

அம்மா இங்கு இருக்க மகள் இங்கு இருக்க
அக்காமாரும் இங்கு இருக்க தங்கையே நீ மட்டும் எங்கே

அழுகையை காணாத அழகே
எங்களை அழவைத்து சென்றது ஏன்
கடைக் குட்டியாய் பிறந்த நீ
முதல் குட்டியாய் யமலோகம் சென்றாயோ!

தாமரை போன்ற முகத்தினை உடையவளே
இன்று தாமரை கசங்கியது ஏன் எங்களை விட்டு ஏன்
சென்றாய் யார் சொன்னது? நீ இறந்தாய் என்று
காலை உதிக்கும் சூரியன் செங்கதிரை வீசியது போல
எங்கள் மனதில் மகிழ்ச்சிக்கதிரை வீசிக்கொண்டு உதித்தவளே

அந்தி வேளையில் மறையும் சூரியன் போல நீயும்
சென்று மறைந்துள்ளாய் இறக்கவில்லை என் தங்கையே!

இங்ஙனம்
அம்மா, மகள்,
அக்காமார் (மீரா, மதுரா), பெறாமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளை பாடசாலைகளுக்குள் முன்னெடுக்க வேண்டாம்

## தொழிற்சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

**பாடசாலை வளாகத்திற்குள் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.**

பாடசாலை வளாகப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் விசாரணைகளால் மாணவர்களிற்கு உடல், உள பாதிப்புகள் ஏற்படலாம் என கல்வித்துறை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

யுக்திய நடவடிக்கைக்கு சமாந்திரமாக பொதுமக்கள், பாதுகாப்பு அமைச்சும் பொலிஸாரும் பாடசாலைப் பகுதிகளில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள போதைப்பொருள் வர்த்தகத்தினை முடக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள நிலையில் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் பாடசாலைக்குள் எந்த விசாரணைகளையும் மேற்கொள்ளக் கூடாது என தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

பாடசாலைகளில் இருந்து போதைப்பொருளை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் உணர்ந்துள்ளோம். ஆனால் முழுமையான திட்டமொன்றின் மூலமே போதைப்பொருளை ஒழிக்க முடியும். ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஒரு திட்டத்தினால் அகற்ற முடியாது.

ஆட்சியில் உள்ளவர்களின் தேவைக்காக அவர்களை மக்கள் மத்தியில் பிரபலமாக்குவதற்காக இவ்வாறான திட்டங்கள் காலத்திற்கு காலம் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் இதனால் ஆசியர்களிற்கும் மாணவர்களிற்கும் எந்த பலனுமில்லை எனவும் குறிப்பிட்டுள்ள இலங்கை ஆசிரியர்கள் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க பாடசாலைகளில் போதைப்பொருள் ஒழிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அவற்றை மிகவும் அவதானமாக முன்னெடுக்க வேண்டும். அதன் விளைவுகள் மாணவர்களுடன் நேரடியாக தொடர்புபட்டவை எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# வாக்காளர் பதிவு அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

வாக்காளர் பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் மாதம் முதல் கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்படுவதுடன் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க ப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி 1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு சட்டத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு ஒரு மாதம், இரு மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும்.

வாக்காளர் பெயர் பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை மாதமளவில் நிறைவடையும். அதனை தொடர்ந்து வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டு நான்கு அல்லது நான்கு வார காலத்துக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். மேலும் 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர் தலை நடத்துவதற்கு ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தி ருந்தது. ஆனால் நிதி விடுவிப்பு தாமதமானதால் தேர்தல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5-6)

# புதிய திணைக்களத்தை நிறுவ அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

கறுவா அபிவிருத்தித் திணைக்களம் எனும் பெயரில் புதிய திணைக்களமொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள கறுவா திணைக்களத்திற்கு ஒப்படைத்தல் பொருத்தமானது என கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்துப் பணிகளையும் கறுவா அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறை அமைச்சர் சமர்ப்பித்த குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5-6)

# சிதறிக் கிடக்கும் தலைமைத்துவத்தை சிறீதரன் ஒன்றிணைக்க வேண்டும்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தல்



(லண்டன்)

சிதறிக்கிடக்கும் தலைமைத்துவத்தை சிறீதரன் ஒன்றிணைக்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நிலத்திலும் புலம்பெயர் தேசத்திலும் கட்சிகள் மற்றும் அமைப்புக்களை ஒன்றிணைக்கும் காலப் பணியை நீங்கள் ஆற்ற வேண்டும் என்றும் செயலூக்கமான நடவடிக்கை வாயிலாகவே ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, முதற் தடவையாக கட்சிதலைவர்தெரிவில்மக்கள்ஆட்சிமுறையின் வாயிலாக தெரிவு இடம்பெறுவதும் வெற்றிபெறுவதும்தான்கட்சிமற்றும்அமைப்புக்கள் சார்ந்த ஜனநாயகத்தையும் நம்பிக்கையையும் வலுப்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5-6)

# செய்தித்துளிகள்

## நிஷாந்தவின் வெற்றிடத்திற்கு ஜகத் பிரியங்கர

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் திடீர் மரண த்தினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஜாதிக நிதஹஸ் பெரமுனவை சேர்ந்த 'ஜகத் பிரியங்கர' நியமிக்கப்படவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜகத் பிரியங்கர, விமல் வீரவன்ச தலைமையிலான ஜாதிக நிதஹஸ் பெரமுனவின் மாவட்டத் தலைவராக செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## நெடுஞ்சாலையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலையில் கெரவலப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வெளிநாட்டவர் ஒருவர் உயிரிழ ந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டி நோக்கி பயணித்த வெளிநாட்டவர் கள் குழுவொன்றை ஏற்றிச் சென்ற வான் லொறியுடன் மோதியதில் அவுஸ்திரேலிய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வானில் பயணித்த மேலும் மூன்று வெளிநாட்டவர்கள் காய மடைந்த நிலையில் ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். தொழில்நுட்ப கோளாறு காரணமாக லொறி நிறுத்தப்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (நி-5-6)

## ரயிலில் இருந்து தவறி விழுந்த ரஷ்ய யுவதி

(ஹற்றன்)

ரயிலில் பயணித்த ரஷ்ய பெண்ணொருவர் செல்ஃபி எடுக்க முற்பட்ட போது, தவறி வீழ்ந்து பலத்த காயமடைந்து தெமோதர ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ரஷ்ய பிரஜையான கிறிஸ்டினா அலக்வானா என்ற 25 வயதுடைய யுவதியே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரு நாள் பயணமாக ஹிக்கடுவையில் இருந்து எல்ல நோக்கி சென்றிருந்த போதே அவர் இந்த விபத்தை சந்தித்துள்ளார். (நி-5-6)

## மேலும் 871 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பொலிஸாரின் யுக்திய நடவடிக்கையில் மேலும் 871 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 626 சந்தேகநபர்கள் மற்றும் குற்றப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பட்டியலில் இருந்த 245 சந்தேகநபர்கள் உட்பட மொத்தம் 871 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஆடவருக்கான உலகக்கிண்ணம் நமிபியாவை வீழ்த்திய இலங்கை




பத்தொன்பது வயதுக்குட்பட்ட ஒருநாள் கிரிக்கெட் உலகக்கிண்ணத் தொடரின் 12 ஆவது லீக் போட்டியில் இலங்கை அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கிம்ரர்லே-டயமண்ட் ஓவல் மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், இலங்கை அணியும் நமிபியா அணியும் பலப் பரீட்சை நடத்தின.

குழு "சி" பிரிவில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் பெற்றி பெற்ற நமிபியா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 37.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக சுப்புன் வாதுகே ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் ருசந்த கமகே 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். நமிபியா அணியின் பந்து வீச்சில், ஸாக்கியோ வான் வுரென் 4 விக்கெட்டுகளையும் ஜோஹன் னஸ் டி வில்லியர்ஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 134 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நமிபியா அணி, 27 ஓவர்கள் நிறைவில் 56 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இலங்கை அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் விஷ்வா லஹிரு மற்றும் ருவிஷான் பெரேரா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் தினுர கலுபாஹன 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணி வீரர் சுப்புன் வாதுகே தேர்வு செய்யப்பட்டார். (நி-5-6)

## ஐ.எம்.எப்...

கொழும்பு சுங்கத் தலைமையகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற சர்வதேச சுங்க தின நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை விலகிக் கொண்டால் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் மீண்டும் நம்பிக்கை வைக்க முடியாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைவரும் ஒன்றிணைந்து பொதுவான உடன்படிக்கையுடன் நாட்டை வெற்றிப்பாதையில் கொண்டு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தலுக்குத் தயாராகும் பட்சத்தில் நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பில் திட்டமொன்று அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வரி வருமானத்திற்காக சுங்கத் திணைக்களத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய சட்டங்கள் மற்றும் நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் என்பன அரச வருமானத்தை ஈட்டும் அனைத்து நிறுவனங்களையும் மாற்றியமைக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## விபரீத...

(வயது -21) என்ற யுவதியே வீட்டில் தூக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதியை மீட்டு சங்கானை வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளினை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## யாழில்...

இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் - கீரிமலைப் பகுதியில் தங்கி இருந்து வேலை செய்து வந்துள்ளார். இந் நிலையில் அவருக்கு காய்ச்சல் மற்றும் வாந்தி ஏற்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்பு தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

அவரது மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# ஒருநாள் கிரிக்கெட்டின் சிறந்த வீரருக்கான விருது

## ஐ.சி.சி அறிவிப்பு

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஒவ்வொரு வருடமும் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த ஒருநாள் அணி, இருபது- 20 அணி, டெஸ்ட் அணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில், 2023ஆம் ஆண்டிற்கான ஒருநாள் கிரிக்கெட்டின் சிறந்த வீரர் விருதை விராட் கோலி வென்றுள்ளார் என ஐ.சி.சி அறிவித்துள்ளது.



அதன்படி 2023ஆம்ஆண்டின் சிறந்த ஒருநாள் வீரர் விருதுக்கு 4 பேரின் பெயர்களை ஐ.சி.சி பரிந்துரைத்துள்ளது. அதில் 3 இந்திய வீரர்கள் இடம் பெற்றிருந்தனர்.

இந்தியாவின் நட்சத்திர பட்ஸ்மேன் விராட் கோலி, வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி, தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில் மற்றும் நியூசிலாந்து அணியின் டேரில் மிட்செல் ஆகியோர் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நடமாடும் கடைகள், தள்ளுவண்டில்கள், குடில்கள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2024

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 2024 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - ரூபா **1,180.00** (வற் வரியுடன்) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - **29.01.2024 - 05.02.2024 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)** |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - **06.02.2024** மு.ப 10.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - **06.02.2024** மு.ப 10.00 மணிக்கு |

1. விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **06.02.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கேள்வி சமர்ப்பிப்பவர் இலங்கைப்பிரஜையாக இருக்க வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக் கணிக்கப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகை, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டையின் பிரதி மற்றும் வதிவிடச்சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. குத்தகை தொடர்பான நிபந்தனைகளை அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம் .

2024 ம் ஆண்டிற்குரிய நடமாடும் கடைகள், தள்ளுவண்டில்கள், குடில்கள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

| இல | விபரம் | கடைகளின் இல | பிணைப்பணம் | ஒரு வருடத்துக்கான ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | நடமாடும் கடைகள் | | | |
| 01 | ஆரிய குளம் | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 02 | துரையப்பா விளையாட்டு அரங்கு | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 03 | பண்ணை கடற்கரை | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 04 | பண்ணை கடற்கரை | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 05 | பண்ணை கடற்கரை | இல 03 | 20,000.00 | 180,000.00 |
| 06 | சுப்பிரமணியம் பூங்கா | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 07 | பண்ணை மீன்சந்தை | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 08 | பண்ணை மீன்சந்தை | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 09 | நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 10 | நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 11 | நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் | இல 03 | 20,000.00 | 180,000.00 |
| | பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் | | | |
| | வியாபாரம் செய்வதற்குரிய தள்ளுவண்டில்கள் | | | |
| 12 | தள்ளுவண்டில் | இல 02 | 20,000.00 | 120,000.00 |
| 13 | தள்ளுவண்டில் | இல 03 | 20,000.00 | 120,000.00 |
| 14 | தள்ளுவண்டில் | இல 04 | 20,000.00 | 120,000.00 |
| 15 | தள்ளுவண்டில் | இல 05 | 20,000.00 | 120,000.00 |
| 16 | தள்ளுவண்டில் | இல 06 | 20,000.00 | 120,000.00 |
| 17 | தள்ளுவண்டில் | இல 07 | 20,000.00 | 120,000.00 |
| | நெடுந்தூர பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடில்கள் | | | |
| 18 | குடில் | இல 01 | | 50,000.00 |
| 19 | குடில | இல 02 | | 50,000.00 |
| 20 | குடில | இல 03 | | 50,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர், யாழ். மாநகரசபை.**

(சி-8212)

# இராசிபலன்

27.01.2024
தை 13, சனிக்கிழமை
துதியை பின்னிரவு 3.32 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 1.17 மணிவரை

சுபநேரம் -3.36-5.06 மணிவரை
இராகுகாலம்-9.36-11.06 மணிவரை

சந்திராஷ்டமம்
மூலம், பூராடம்.

**வளவன்**

### மேஷம்
சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

### கடகம்
உங்களின் சரியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

### துலாம்
எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

### மகரம்
சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

### ரிஷபம்
தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

### சிம்மம்
நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

### விருச்சிகம்
பயணங்களால் பலனுண்டு, தொட்ட காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

### கும்பம்
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

### மிதுனம்
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

### கன்னி
சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

### தனுசு
உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு தடைகளை அகற்றுவீர்கள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும்.

### மீனம்
உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**ஒரு புன்முறுவலால் பல துன்பங்களை முறியடிக்க முடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாவிட்டபுரம் கந்தசுவாமி


இணுவில் கந்தசுவாமி


நல்லூர்

தைப்பூசத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் யாழில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்களில் பக்திபூர்வமாக இடம்பெற்ற மஞ்சத்திருவிழா.

(படங்கள்: சிவசாந்தன்)

# கலைத்தூது அழகியல் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 13 ஆவது பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.யோண் குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (நி-5-6)

# வடக்கு - கிழக்கில் சுதந்திரதினம் கரிநாளாக பிரகடனப்படுத்த வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக மாணவ ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்த வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தினை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடக்கு- கிழக்கு தழுவிய பிரகடனத்தை பொது மக்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

குறிப்பாக இந்த இலங்கைத் தீவிலே தமிழ் மக்களுக்கான உரிமைகள், இருப்புக்கள் மீறப்பட்டுக் கொண்டே வருகின்றது. ஆட்சிகள் மாறுகின்றது. ஆட்சியாளர்களும் மாறிக்கொண்டே இருக்கின்றார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு இன்றுவரை எந்த ஒரு தீர்வு திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. மேலும் இதய சுத்தியுடன் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுதர சிங்கள தரப்புக்கள் தயாராக இல்லை.

அரசு ஒருபொழுதும் தமிழர்களுடைய அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு-கிழக்கில் அத்துமீறி நிகழுகின்ற குடியேற்ற திட்டங்கள், திட்டமிட்ட பௌத்தமயமாக்கலையோ நிறுத்த போவதில்லை. தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை காணாது நாங்கள் எங்களுடைய போராட்டங்களை கைவிடப் போவதில்லை என பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்துகின்றோம்.

வடக்கு -கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள், சிவில் சமூகங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், அனைத்து தொழிற்சங்கங்களும் சுதந்திர தினத்தினை கரிநாளாக பிரகடனப்படுத்த ஆதரவினை வழங்க வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (நி-5-6-33)

# காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாகன இலக்கத் தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்திலிருந்து 2024. 01.11 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலக அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மாவட்டச் செயலக இணையத் தளத்திலும் பார்வையிட முடியும்.

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழி சாமுண்டா தேவி ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. இவ் உற்சவம் பதினேழு தினங்கள் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் இராஜ கோபுர நுழைவாயில் திறப்பு விழாவும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



# முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனத்தினால் கடந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் 1290 பேருக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டு அதற்குரிய சர்வதேச தரத்திலான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் பல பாடசாலைகளில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸின் புதிய படையணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு கோயில் உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் முதலுதவி நிலையங்கள் அமைத்து பலருக்கு முதலுதவி சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

குறித்த முதலுதவி பயிற்சியுடனான சான்றிதழ் பெற விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள், இளைஞர், விளையாட்டுக்கழகங்கள், அமைப்புக்கள் போன்றவை 077 353 0423, 077 019 9199 , 077 171 2043 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொள்ள முடியும் என முதலு தவிப் பயிற்சி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய 1008 சங்காபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி 9.30இற்கு சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை மற்றும் திருவூஞ்சல் பாட்டை தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# சேவைநலன் பாராட்டு

## திருமதி. சறோஜாதேவி கருணாகரன்

(SLTS-I, Special Trained Science, BA, Dip in Edu)



எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி 24.01.2024 அன்று ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி. சறோஜாதேவி கருணாகரன் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.


**சேவை விபரம்**

- யா/அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலை 1990.10.25-1993.01.31
- யா/பலாலி ஆசிரியர் கலாசாலை 1993.02.01-1994.12.31
- யா/அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலை 1995.01.01-1997.05.27
- யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை 1997.05.28.-2010.06.15
- யா/கனகரத்தினம் மத்தி மகா வித்தியாலயம் 2010.06.16-2024.01.24

*வாழ்த்துவோர்:-* அதிபர், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

(18746)

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக யாழில் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்து யாழில், நேற்று வெள்ளிக்கிழமை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், யாழ்.பொதுநூலகத்தில் இருந்து பேரணியாக யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் உள்ளிட்ட தென்னிலங்கை ஊடக அமைப்புக்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6)




கொழும்பு-07. ஜெயவர்த்தன மண்டபத்தில் நடைபெற்ற ஜனரஞ்சகப் பாடகர் கலைக்கமலின் "கீத்ராத்-60" மாபெரும் நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்த சிங்கப்பூர் பிரபல இஸ்லாமிய கீத சிறப்புப் பாடகர் ஃபரிஹுல்லாஹ் அவர்களை கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். (சி-8213)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3024

**சனா**

எட்டு மணி ஆனால் வருத்தப்பட்டோம்,
இரண்டு மணி ஆனால் சந்தோஷப்பட்டோம்...



இப்போ அந்த நாளுக்காக ஏங்கி நிற்கின்றோம்...
பாடசாலை நினைவுகள்...

**கௌதம்**

இருக்கிற எல்லா சமையல் நிகழ்ச்சியும் ஒன்னு விடாம பாக்கிறது... பாத்துட்டு...



செய்யிறது என்னவோ உப்புமா, இட்லி, தோசைதான்...

**தர்ஷி**







**பிருத்திகா**

டார்லிங் ஒரு வார்த்தை சொல்லு அதில
சந்தோமும் இருக்கனும் கஷ்டமும் இருக்கனும்




**சாம்பவி**


பாட்டோட சேர்ந்து பாடும்போது உதித்நாராயணன் குரல் வருது...



தனியா பாடுனா நம்ம Voice வருது...

**கிருபா**

மனைவி: பக்கத்து வீட்டு அக்கா கூப்பிட்டாங்க போயிட்டு பத்து நிமிசத்தில வந்திடுறேங்க...
கணவன்: பத்து நிமிசத்தில வந்துருவியா...



மனைவி: வந்துடுவேங்க அடுப்பில வைச்சிருக்கிறதை அரைமணி நேரத்துக்கு ஒருமுறை கிண்டி விடுங்க...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் 75 ஆவது குடியரசு

# விழாக்கோலம் பூண்ட செங்கோ

(டில்லி)

**இந்தியாவின் 75 ஆவது குடியரசு தின விழா நேற்று வெள்ளிக்கிழமை தலைநகர் டில்லியிலுள்ள செங்கோட்டையில் குடியரசு தலைவர் திரௌபதி முர்மு தலைமையில் இடம்பெற்றது.**





21 பீரங்கி குண்டுகள் முழங்க குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப் பட்டது. பின்னர் கர்தவ்ய பாதையில் முப்படைகள் உள்ளிட்ட பல்வேறு படைப் பிரிவினரின் அணி வகுப்பு இடம்பெற்றது.

போர் வீரர்கள் நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார். அவருடன் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங், முப்படை தளபதிகளும் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை டில்லியில் நடைபெறும் விழாவில். பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். டில்லியின் அனைத்து எல்லைகளும் மூடப்பட்டு அத்தியாவசிய பொருட்களை ஏற்றி வரும் வாகனங்கள் மட்டுமே நுழைய அனுமதிக்கப்பட்டது.

மேலும் தலைநகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதுடன் இதில் இராணுவ வலிமையை பறை சாற்றும் வகையில் அதிநவீன ஏவுகணைகள், போர்க்கப்பல்களின் மாதிரிகள், கவச வாகனங்கள் உள்ளிட்டவை அணிவகுப்பில் இடம்பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



## அயோத்தி கோவிலைவிட பீகாரில் பிரமாண்டமாக உருவாகும் ராமர் கோவில்


(டில்லி)

அயோத்தி ராமர் கோவிலை விட 5 மடங்கு பெரியதும் பிரமாண்டமாகவும் பீகாரில் ராமர் கோவில் கட்டப்பட்டுவருகிறது.

1080 அடி நீளமும் 540 அடி அகலமும் 5 கோபுரங்களாக உருவாகும் இந்த கோயிலில் மிக உயரமான கோபுரம் 405 அடியிலும், மீதமுள்ள 4 கோபுரமும் 180 அடியிலும் கட்டப்படவுள்ளது.

இந்த கோவில் நுழைவு வாயிலில் 20 ஆயிரம் பேர் அமர்ந்து பிரார்த்தனை செய்யக்கூடிய அளவில் ஒரு பெரிய பிரார்த்தனை கூடம் ஒன்று அமையவுள்ளது.

இந்த கோவிலை நிர்மாணிக்கும் பணிகள் கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பமாகியது.



பீகார் மாநிலம் கிழக்கு சம்பாரனில் உள்ள கைத்வாலியாவில் இந்த ராமர் கோவில் கட்டப்பட்டு வருகிறது.


கோவில் முழுமையாக கட்டப்பட்ட பிறகு ஜனக்பூர் வழியாக அயோத்தி செல்லும் மக்கள் இந்த கோயிலை தூரத்தில் இருந்தே காண முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இதன் கட்டுமான பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் கோவிலின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5-6)

## தங்க சுரங்கம் இடிந்து

## சுமார் 70 பேர் உ

## மாலியில் சோகம்



(நியானி)

மாலி நாட்டில் உள்ள தங்க சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 70 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மாலி நாட்டில் தென்மேற்கு கோலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு



## ...சு தினம்
## ...காட்டை





## ரஷ்ய விமான விபத்து தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்

### வொலோடிமிர் ஜெலென்ஸ்கி

(கீவ்)

ரஷ்ய இராணுவ விமானம் விழுந்து நொறுங்கிய விவகாரம் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என உக்ரைன் வலியுறுத்தியுள்ளது.

கடந்த புதன்கிழமை ரஷ்யாவின் பெல்கராட் நகரில் இருந்து உக்ரைன் போர்க் கைதிகளை ஏற்றி வந்த விமானம் விழுந்து நொறுங்கியதில் 65 உக்ரைன் போர்க் கைதிகள் உட்பட 74 பேர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அந்த நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி கூறுகையில்,

அந்த விமானம் ஏன் விழுந்து நொறுங்கியது. அதில் இருந்தவர்கள் யார் என்பது குறித்து தெரிந்து கொள்வது அவசியம்.

உக்ரைனியர்களின் உயிருடன் விளையாடுவது ரஷ்யாவின் வழக்கமாகியுள்ளது. எனவே, இந்த விவகாரம் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

65 உக்ரைன் போர்க் கைதிகளை ஏற்றிக் கொண்டு தங்களுக்குச் சொந்தமான இல்யுஷின் எல் - 76 ரகத்தைச் சேர்ந்த விமானம் எல்லை நகரான பெல்கராட் வான் பகுதியில் நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்த போது அது விழுந்து நொறுங்கியதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்தது.

உக்ரைன்தான் அந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. எனினும், இந்தக் குற்றச்சாட்டை உக்ரைன் மறுத்து வருகிறது. (நி-5-6)

## 70 ஆண்டுகளுக்குப் பின் சவூதியில் மதுபானக்கடை

(ஜெத்தா)

சவூதி அரேபியாவில் 70 ஆண்டுகளுக்கு பிறகு மதுபானக்கடை திறக்கப்பட்டுள்ளது.

1950 ஆம் ஆண்டு,சவூதி அரேபியாவில் ஆட்சி செய்த மன்னர் அப்துல் அஜீஸ் மதுவுக்கு தடை விதித்தார்.

ஜெத்தாவில் தனது மகன்களில் ஒருவரான இளவரசர் மிஷாரி, பிரித்தானிய துணைத்தூதர் சிரில் ஒஸ்மானை சுட்டுக் கொன்ற சம்பவத்துக்குப் பிறகு அவர் அந்த முடிவை எடுத்திருந்தார்.



எனினும் கடந்த புதன் கிழமை சவூதி அரேபியாவின் ரியாத்தில் முஸ்லிம் அல்லாத இராஜதந்திரிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட இந்த மதுபானக்கடை திறக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவை சுற்றுலா மற்றும் வர்த்தக ஸ்தலமாக மாற்றும் பட்டத்து இளவரசர் மொஹமட் பின் சல்மானின் வேலைத்திட்டத்துடன் இணைந்து இந்த மதுபானக் கடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

## காசா மீது தாக்குதல் நடத்திய இஸ்ரேல்

### 20 பேர் பலி



(காசா)

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய ஈவிரக்கமற்ற தாக்குதலில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் சுமார் 150 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் உணவு பெற வரிசையில் காத்திருந்த மக்களை குறி வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் இஸ்ரேலில் இந்த தாக்குதல் ஒரு போர்க் குற்றம் என்றும், இஸ்ரேல் வேண்டுமென்றே இத்தகைய தாக்குதல்களை நடத்துவதாகவும் ஹமாஸ் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. (நி-5-6)

## ...து விழுந்ததில் ... உயிரிழப்பு
## ...0



கோரோ பகுதியில் உள்ள கங்காபா மாவட்டத்தில் தங்க சுரங்கம் ஒன்று உள்ளது. இந்த சுரங்கம் திடீரென கடந்த 19 ஆம் திகதி இடிந்து விழுந்தது.

இந்த சம்பவத்தில் நூற்றுக்கணக்கானோர் மண்ணில் புதைந்துள்ளதாக தகவல் வெளியாகியது. உடனடியாக மீட்பு படையினர் வரவழைக்கப்பட்டு மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவ்வாறானவொரு நிலையில், தற்போது வெளியிடப்பட்ட அறிக்கையில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 70 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் இந்த எண்ணிக்கை உயரக் கூடும் என்றும் கூறப்படுகிறது. (நி-5-6)

...தகவல்
...மேலும்
...மாலி
...கோலி

## செங்கடல் தாக்குதல்களால் 3 ஆம் உலகப்போர் நேரிடும்

### ஐ.நா.பொதுச்சபைத் தலைவர் எச்சரிக்கை

(நியூயோர்க்)

செங்கடலில் நடத்தப்படும் தாக்குதல்கள் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கக் கூடும் என ஐ.நா. பொதுச் சபை தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் எச்சரித்துள்ளார்.

செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த சிறப்பு பேட்டியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


வளைகுடாவில் நடைபெற்றுவரும் போர் தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடங்கிய தாக்குதலுக்கு மூன்றாம் தரப்பினர் உதவுவது வெளியாகியுள்ளது.

இதனால் சூழல் மிகவும் மோசமாக மாறி வருகிறது. அதேபோல் காசா பிரச்சினைக்கு அமைதி வழியே தீர்வு.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் என இரண்டும் தனிநாடுகளாக செயற்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் செங்கடலில் தொடர்ந்து நடக்கும் தாக்குதல்கள் கவலையளிப்பதாகவும் இத்தாக்குதல் தொடர்ந்தால் மூன்றாம் உலகப்போருக்கு வழிவகுக்கக் கூடும் என்றும் ஐ.நா. பொதுச் சபை தலைவர் தெரிவித்தார். (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்திய துணைத்தூதரகத்தில் இடம்பெற்ற குடியரசு தினம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 75 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் யாழ். இந்திய துணைத்தூதுவராலயத்தில் நேற்று இடம்பெற்றது.



இந்திய எல்லைப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் யாழ்.இந்திய துணைத் தூதுவர் அழைத்துவரப்பட்டு இந்திய தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமான குறித்த நிகழ்வில் இந்திய குடியரசுத் தலைவரின் சிறப் புரையினை யாழ்.இந்திய துணைத் தலைவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தளித்ததோடு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது.

குடியரசு தின நிகழ்வில் இந்திய துணைத் தூதுவராலய அதிகாரிகள், இந்திய பிரஜைகள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-33)

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# விடுதலையான சாந்தன் வைத்தியசாலையில் அனுமதி

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட இலங்கையை சேர்ந்த சாந்தன் திடீரென ஏற்பட்ட உடல் நலக்குறைவினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருச்சி அரச மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.


54 வயதான சாந்தன் திருச்சி சிறப்பு முகாமில் தங்கியிருந்த நிலையில் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். எனினும், இவர் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர் என்பதால் அவருடைய சொந்த நாட்டில் இருந்து ஒப்புதல் கிடைத்த பின் அனுப்புவதற்கான நடைமுறைகள் செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் சாந்தனுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இதனால் தற்போது திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் தன்னை இலங்கைக்கு அனுப்பக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்துள்ள மனு நிலுவையில் உள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-5-6)



## வாக்குறுதிகளின் அரசியலே பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம்

# ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு பிரதான காரணம் வாக்குறுதிகளின் அரசியலே என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச சுங்க தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள சுங்கத் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அதற்கிணங்க குறிப்பாக தேர்தலுக்குத் தயாராக இருக்கும் போது நாட்டை கட்டியெழுப்புவதற்கான விரிவான திட்டத்தை தயாரிக்குமாறு ஜனாதிபதி அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கேட்டுக் கொண்டார். (நி-5-6)

# ஏப்ரல், ஒக்டோபரில் மட்டுமே மின் கட்டணத் திருத்தம்

(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் மாதம் தவறான முன்னறிவிப்புகளின் அடிப்படையில் மின்சார சபைக் கட்டணங்களை திருத்தியமைத்துள்ளதாக பாராளுமன்றத்தின் எரிசக்தி மற்றும் போக்குவரத்துக்கான துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் மின்சார சபைக்கு கணிசமான இலாபம் கிடைத்துள்ளது.

இம்மாதம் மின் கட்டணத்தை குறைப்பதற்கான யோசனைகள் அடங்கிய அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து இதனைக் குறித்த குழு தெரிவித்திருந்தது.

இந்தக் கட்டணத் திருத்தம் மீளப் பெறப்பட வேண்டும் அல்லது மறுபரிசீலனை செய்து உரிய முறையில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் குழு பரிந்துரைத்துள்ளது.

மேலும், இந்தக் கட்டணத் திருத்தத்தால் தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் இழப்பைத் தவிர்க்க நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் ஏப்ரல், ஒக்டோபர் மாதங்களில் மட்டுமே மின் கட்டணத் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் குழு பரிந்துரைத்துள்ளது. (நி-5-6)

## இன்று ஒரு தகவல் 18



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# விநோத ஆராய்ச்சி

அமெரிக்காவிலே - கலிபோர்னியா யுனிவெர்சிட்டியிலே Larry deiden ஒருத்தர். இவரு ஒரு ஆராய்ச்சியாளர். எதைப்பற்றி ஆராய்ச்சி பண்ணலாம்ன்னு யோசித்தார்.

கடைசியிலே ஒரு முடிவு பண்ணினார். தற்கொலையை பற்றி ஆராய்ச்சி பண்ணலாம் என்று.

ஆமாம்! தற்கொலை சாவுகளைப் பற்றி ஆய்வு பண்ணுவம் என்று இவருக்கு ஆசை வந்துவிட்டது! சரி!

அதுக்கு என்ன பண்ணினாரு தெரியுமா? அமெரிக்காவிலே இரண்டு பாலத்தைத் தேர்ந்தெடுத்தார். சான்பிரான்சிஸ்கோவுலே இரண்டு பாலம் இருக்கு! Golden gate Bridge என்கிறது ஒரு பாலம். Bay Bridge என்கிறது இன்னொரு பாலம்.

இந்த பாலமும் 1930 களிலே கட்டியது. இந்த இரண்டு பாலத்துக்கும் நீளம் ஒன்றுதான். ஒவ்வொன்றும் 200 அடி நீளம்.

சாதாரணமா அடிக்கடி இந்த இரண்டு பாலத்திலே இருந்தும் பல பேர் விழுந்து தற்கொலை பண்ணிக்கிறது வழக்கம்.

ஆமாம். அவ்வளவு சகஜமாப் போய்விட்டது. தற்கொலை என்கிறது!

நம்ம ஆராய்ச்சியாளர் இந்த பாலங்களிலே இருந்து விழுந்து தற்கொலை பண்ணிக்கிறவங்களைப் பற்றி கணக்கெடுத்தார்.

இரண்டு பாலமும் 1930 களிலே கட்டினதுதான். இரண்டு பாலமும் ஒரே மாத்திரி ஒரே அளவு நீளம் உள்ளதுதான்.

ஒவ்வொன்றும் 200 அடி! அப்படி இருந்தும் இந்த இரண்டு பாலத்திலேயிருந்து விழுந்து தற்கொலை பண்ணிக்கிறவங்க எண்ணிக்கையை கணக்கெடுத்து பார்த்தா அதிலே அதிகமா வித்தியாசம் இருக்கு.

Bay Bridge என்று சொன்னேனே. அதிலே எவ்வளவு தற்கொலைகள் நடந்திருக்கோ அதைப்போல 5 மடங்கு அதிகமாக Golden gate Bridge இல் நடந்திருக்கு!

இதுக்கு என்ன காரணமா இருக்கும்? அதை பற்றி யோசிக்க ஆரம்பிச்சார்!

Golden gate Bridge இற்குப் புகழ் அதிகம்.

அதோட பெயரும் நல்லா இருக்கு... Golden என்று இருக்குதல்லே.

இந்த பாலம் கௌரவத்திலே கூடினது. அதனாலே சாகப்போறவங்க இந்தப் பாலத்தை தேடி வந்திருப்பாங்களோ?

மனோ தத்துவ ரீதியாக ஆராய்ச்சிப் பண்ணுறவங்க இது அப்படித்தான் நடக்குதுன்னு சொல்றாங்க! சாகப் போறவங்க கூட கௌரவமா சாகணும் என்று நினைக்கிறாங்களாம். அதனாலேதான் கௌரவமான பாலத்தை தேடி வந்து அதிலே இருந்து குதித்து செத்துப் போறாங்க! இன்னமும் சொல்லப் போனா bay bridge ஐ தாண்டி அந்தப் பக்கம் இருக்கிறவங்க கூட தற்கொலைக்குன்னு வாறப்போ அந்தப் பாலத்து வழியாகவே அதைத் தாண்டி இந்தப் பக்கம் வந்து Golden gate Bridge இல் இருந்து குதித்து செத்துப் போறாங்க. அப்படின்னா பார்த்து கொள்ளுங்களேன்.

சாகுறவங்க கூட கௌரவமா சாகணும்ன்னு நினைக்கிறாங்க. அதைவிட வாழுறவங்க கௌரவமா வாழணும்ன்னு நினைச்சா நல்லா இருக்கும் இல்லையா?

நல்லவிதமா ஒரு பாலத்தை கட்டி அதற்கு நல்ல விதமா ஒரு பெயரை வைத்தா கூட அதிலேயும் ஒரு கஷ்டம் இருக்கு பார்த்தீங்களா?

இந்த கணக்குப்படி பார்த்தா நம்ம ஊரிலே ஜனங்க, விருப்பமா தேடிவந்து, கௌரவமா தற்கொலை பண்ணிக்கிற அளவுக்கு எந்த பாலமும் இருக்கிறதா தெரியல.

அதனாலேதான் இங்கேயெல்லாம் பாலத்திலேயிருந்து குதித்து மனிதன் அதிகமாக தற்கொலை பண்ணிக்கிறது இல்லை.

அதுக்கு பதிலா பஸ்-ரயில், இதெல்லாம் பாலத்திலே இருந்து குதித்து தற்கொலை பண்ணிக்குது. அது மட்டுமில்ல நம்ம ஆளுங்க தற்கொலை என்கிறதுக்கு கொடுக்கிற விளக்கமே தனிவிதமா இருக்கு.

ஒரு ஆசாமி இப்படித்தான் ஒரு நாள் என்கிட்ட வந்தாரு. அவருக்கிட்ட நான் மேலே உள்ள செய்தியை சொன்னேன். அவரும் ரொம்ப சுவாரஸ்யமாக கேட்டுக் கொண்டாரு. கடைசியாக நான் அவருக்கிட்ட கேட்டேன்! "இப்படி பாலத்திலிருந்து குதித்து தற்கொலை பண்ணிக்கிறவங்களைப் பற்றி என்ன நினைக்கிறீங்க" என்று கேட்டேன். அதுக்கு அவரு...

"அதைப்பற்றியெல்லாம் நான் ஒன்றும் சொல்லுறதுக்கு இல்லை. ஏன்னா.. நான் தற்கொலை பண்ணிக்கிட்டு 15 வருஷமாச்சு என்றாரு. என்னங்க சொல்றீங்க என்றேன்! எனக்கு கல்யாணமானதை சொல்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







K.T.C நிறுவனத்தின் பரிசளிப்பு நிகழ்வும் நு/நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியரும் ஜேர்மன் ஸண்டவ் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுமான தமிழ் வாரிதி திரு.திருமதி.குலேந்திரராசா சாந்தினி தம்பதிகளின் மணிவிழாவும் சமூக சேவையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் ஓய்வுநிலை ஆசிரியர் ஞான.திருக்கேதீஸ்வரன் தலைமையில் கோண்டாவில் அரசடி ஆசிமடப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

# தமிழர்கள் பெற்ற துன்பங்களை

## சிங்களவர்களும் அனுபவிக்க தொடங்கிவிட்டனர்



(மன்னார்)

**தமிழ் மக்கள் பெற்ற துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்க தொடங்கி விட்டனர். இதனால் அரசு அச்சத்தில் மூழ்கியுள்ளது. எனவே நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

மன்னார் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில், தமிழர்களின் தேசிய அபிலாசைகளை உலகம் புதிய பரிமாணத்துடன் சிந்திக்க முற் பட்டுள்ளது. நாம் இழந்த ஆத் மாக்கள் இப்பொழுது எமக்கு உத்வேகத்தை தருகிறது. நாம் எந்த நோக்கத்துக்காக எமது உறவுகளின் உயிர்களை இழந்தோமோ அந்த நோக்கங்கள் இன்னும் அழிந்து போகவில்லை. சிங்கள மக்களுக்கு முன்பே நமது தமிழினம் இங்கு வாழ்ந்துள்ளது. நாம் இங்கு பல அடையாளங்களுடன் வாழ்ந்திருக்கிறோம். நமக்கு இந்த நாடு நிம்மதியான அமைதியை தருமா? என்ற கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்டு நிற்கின்றோம். இலங்கை அரசு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காவிடில் இந்த நாடு பெரும் பாதாளத்துக்குள் விழும் என்பது ஐயம் இல்லை.

நாம் பெற்ற துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்க தொடங்கி விட்டனர். இதனால் அரசு பயத்தில் மூழ்கியுள்ளது. இதுவும் தமிழர்களுக்கான பாதை திறக்க வழியாகும். ஆகவே நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம் எனத் தெரிவித்தார். (5-6-285)



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கந்தபுராணத்தின் முதலாம் பாக நூல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டு வைக்கப் பட்டது.

(படம்-சிவசாந்தன்)

# பல கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் மக்கள் கவனயீர்ப்பு

(மன்னார்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னாரில் அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இலங்கையின் வரைபடத்தில் இருந்து மன்னார் தீவை முற்றாக அழிப்பதை நோக்கி நகர்கின்றது.

குறித்த செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த போராட்டம் இடம்பெற்றது.



மன்னார் பிரதான பாலத்தடியில் இருந்து ஆரம்பமான விழிப்புணர்வு பேரணி பிரதான வீதியூடாக சென்று மன்னார் பஜார் பகுதியை சென்றடைந்தது. பின்னர் மன்னார் மாவட்டச் செயலகம் முன் ஒன்று கூடிய மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு தமது கோரிக்கைகளை முன் வைத்து கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் மாவட்டச் செயலகத்தி[illegible] குறிப்பிடத்தக்கது. [illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 800 | 600 | 600 | 700 | 740 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 | 220 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1000 | 1000 | 1000 |
| தக்காளி | 600 | 700 | 600 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 150 | 150 | 130 |
| கோவா | 700 | 500 | 600 | 800 | 600 |
| கரட் | 1400 | 800 | 1000 | 2000 | 1800 |
| பூசணி | 180 | 180 | 150 | 200 | 120 |
| புடோல் | 300 | 300 | 300 | 350 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 480 | 450 | 450 | 250 |
| பெரிய வெங்காயம் | 400 | 350 | 400 | 450 | 380 |
| பாகற்காய் | 800 | 600 | 800 | 1000 | 720 |
| வெண்டக்காய் | 450 | 400 | 350 | 500 | 570 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 | 80 |
| பயற்றங்காய் | 800 | 700 | 800 | 800 | 800 |
| லீக்ஸ் | 450 | 550 | 600 | 800 | 600 |
| பீற்றூட் | 800 | 600 | 800 | 800 | 800 |
| கறிமிளகாய் | 650 | 1000 | 800 | 1000 | 550 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | 2800 | 2150 |
| போஞ்சி | 700 | 600 | 600 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 750 | 500 | 700 | 600 | --- |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 120 | 150 | 80 |
| தேசிக்காய் | 200 | 300 | 350 | 200 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 | 50-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 450 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 500 | 500 | 376 |
| முள்ளங்கி | 200 | 200 | 300 | 300 | 180 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 140 | 60 | 120 |
| வெள்ளரி | 80 | 250 | 50 | 80 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 | 100 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 389





ஆனால் புரவிகளின் பேரில் ஆரோகணித்து விரைவாகச் சென்று கொண்டிருக்கும் சமயத்தில் பேசுவதற்கும் இடம் எங்கே? ஆம் பேசுவதற்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் மட்டும் கிடைத்தது.

அநுராதபுரத்தைக் கிட்டத்தட்ட நெருங்கிக் கொண்டிருந்தபோது சாலை ஓரத்தில் பெரியதொரு புத்த பகவானின் சிலை நிற்பதை வந்தியத்தேவன் கண்டான். இம்மாதிரி சிலைகள் இலங்கையில் பற்பல இடங்களிலும் இருந்தபடியால் அதைப் பற்றி வந்தியத்தேவன் அதிகக் கவனம் செலுத்தவில்லை. ஆனால் பொன்னியின் செல்வர் அச்சிலையின் அருகில் குதிரையைச் சடாரென்று இழுத்துப் பிடித்து நிறுத்தியதும் இவனும் நிற்கவேண்டியதாயிற்று. சற்று முன்னாலேயே போய்க் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானும் குதிரையை நிறுத்தி இவர்கள் பக்கம் திரும்பினான்! பொன்னியின் செல்வர் சற்றுநேரம் அந்தப் புத்த பகவானுடைய கம்பீரமான சிலையைக் கவனமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அடடா! என்ன அற்புதக் கலை!" என்றார்.

"எனக்கு ஒரு அற்புதமும் தெரியவில்லை. இந்த நாட்டில் எங்கே பார்த்தாலும் இத்தகைய பிரம்மாண்டமான புத்தர் சிலைகளை வைத்திருக்கிறார்கள். எதற்காகவோ தெரியவில்லை?" என்றான் வந்தியத்தேவன்.

இளவரசர் வந்தியத்தேவனைப் பார்த்துப் புன்னகை செய்தார். "மனத்தில் உள்ளபடி பேசுகிறீர் அதில் எனக்கு மகிழ்ச்சி" என்றார்.

"இளவரசே! வல்லவரையர் இன்றைக்குத்தான் உண்மை பேசுவதென்கிற வழக்கத்தைக் கைக்கொண்டிருக்கிறார்!" என்றான் திருமலை.

"வைஷ்ணவரே! எல்லாம் சகவாச தோஷந்தான். வீரநாராயணபுரத்தில் உம்மைப் பார்த்தது முதல் என் நாவில் கற்பனா சக்தி தாண்டவமாடி வந்தது. இளவரசரைப் பார்த்ததிலிருந்து உண்மை பேசும் வழக்கம் வந்து விட்டது!" என்றான் வந்தியத்தேவன்.

அவர்களுடைய சொற்போரை இளவரசர் கவனிக்கவில்லை. சிலையின் தோற்றத்தில் ஆழ்ந்திருந்தார்.

"உலகத்திலேயே சிற்பக்கலையின் அற்புதம் பூரணமாக விளங்கும் வடிவங்கள் இரண்டுதான். ஒன்று நடராஜர் இன்னொன்று புத்தர்" என்றார்.

"ஆனால் நடராஜ வடிவங்களை இம்மாதிரி பிரம்மாண்ட வடிவங்களாக நம் நாட்டில் செய்வதில்லையே?"

"இலங்கையில் முற்காலத்தில் இருந்த மன்னர்களில் சிலர் மகா புருஷர்கள். அவர்கள் ஆண்ட ராஜ்யம் சிறியது. ஆனால் அவர்களுடைய இருதயம் பெரியது அவர்களுடைய பக்தி மிகப்பெரியது. புத்த பகவானிடம் அவர்களுடைய பக்தியை இப்படிப் பெரிய வடிவங்களை அமைத்துக் காட்டினார்கள். புத்த சமயத்தில் அவர்களுடைய பக்தியைப் பெரிய பெரிய ஸ்தூபங்களை அமைத்துக் காட்டினார்கள். இந்த நாட்டில் உள்ள புத்தர் சிலைகளையும் விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் பார்த்துவிட்டு நம் சோழ நாட்டிலுள்ள சின்னஞ்சிறு சிவன் கோவில்களை நினைத்தால் எனக்கு அவமானமாயிருக்கிறது!" என்றார் பொன்னியின் செல்வர்.

இவ்விதம் சொல்லிவிட்டுக் குதிரையிலிருந்து இறங்கி இளவரசர் புத்தர் சிலையண்டைச் சென்றார். சிலையின் பத்ம பாதங்களையும், அந்தப் பாதங்களை அலங்கரித்த தாமரை மொட்டுக்களையும் சிறிது நேரம் கவனமாகப் பார்த்தார். பின்னர் புத்தர் சிலையின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டு விட்டுத் திரும்பி வந்து பழையபடி குதிரையின் மீது ஏறினார்.

குதிரைகள் சற்று மெதுவாகவே சென்றன. "ஏதோ? இளவரசர் புத்த மதத்தில் சேர்ந்துவிடுவார் போலிருக்கிறதே?" என்று வந்தியத்தேவன் திருமலையிடம் சொன்னது இளவரசர் காதில் விழுந்தது.

அவர்கள் இருவரையும் பொன்னியின் செல்வர் பார்த்து, "புத்த பகவானிடம் என்னுடைய பக்தி காரணார்த்தமானது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முல்லாவின் காதலி

முல்லா நஸ்ருதீன் ஒரு பெண்ணைக் காதலித்தார். முல்லாவுக்கு எல்லாம் நல்லபடி அமைந்திருந்தது. ஆனால் அவருடைய கண்பார்வை மங்கலானது.

ஆகவே அவர் கண் டாக்டரிடம் கேட்டார் "கண்ணுக்கு சோடா புட்டி போட்டுக் கொண்டிருந்தால் அந்தப் பெண் எப்படி என்னைக் காதலிப்பாள்? அவளுடைய முகம் கூட எனக்கு சரியாகத் தெரியவில்லையே! நான் கண்ணாடி போட்டபடி அவள் எதிரில் போகக் கூடாது: உடனே என்னை நிராகரித்து விடுவாள். என்ன செய்யலாம் ?



டாக்டர் ஆலோசனை கூறினார் " ஒன்று செய்யலாமே! வெகு தொலைவு வரை உம்மால் பார்க்க முடிவது போல் நடியும் இப்படி அவள் நம்பும்படி ஏதாவது செய்து பாரும் ! "

முல்லா இதை செய்து பார்த்துவிடுவது என்று முடிவு செய்தார். ஒரு நாள் பூங்காவில் உட்கார்ந்திருந்தபோது அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது . தூரத்தில் இருந்த ஒரு மரத்தில் ஒரு தையல் ஊசியைக் குத்திவிட்டு வந்தார். நல்ல கண் பார்வை இருந்தால் கூட அவ்வளவு தொலைவில் உள்ள ஊசியை யாராலும் பார்க்க முடியாது.

முல்லா விண்மீன்கள் பளிச்சிடும் இரவில் அன்று அந்த மரத்திலிருந்து 100 அடி தொலைவில் தன் காதலியுடன் உட்கார்ந்திருந்தார், திடீரென அவளிடம் "அதோ அந்த மரத்தில் பொறுப்பில்லாமல் யாரோ ஒரு தையல் ஊசியை குத்தி வைத்திருக்கிறார்களே!" என்று கூறினார்.

அப்பெண் முல்லாவின் கண்பார்வையின் மேல் ஏற்கனவே சந்தேகம் கொண்டிருந்தாள். அப்படி இருக்க இவ்வளவு தொலைவில் ஒரு ஊசி இருப்பதை அவரால் எப்படி காண முடிந்தது என்று ஐயம் கொண்டாள். மேலும் அவளாலும் அதை பார்க்க முடியவில்லை அந்த மரத்தையும் கூட சரியாகப் பார்க்கவில்லை . " நஸ்ருதீன் , எனக்கு ஊசி ஒன்றும் தெரியவில்லையே," என்று கூறினாள்.

முல்லா பந்தாவாக எழுந்து, " நான் போய் அதை எடுத்து வருகிறேன்" என்று கூறியபடி நடக்கலானார். ஒன்றிரண்டு அடி வைத்ததுமே தொப்பென்று தரையில் விழுந்தார். ஏனேன்றால் எதிரில் ஒரு எருமை மாடு நின்று கொண்டிருந்தது. இது அவர் கண்ணுக்குத் தெரியவில்லை.

எந்த வேஷ திருக்காது! உங்கள் வேஷத்தை மக்கள் கண்டுபிடிக்க வெகு நேரமாகாது. ஆனாலும் மரியாதைக்காக நீங்கள் வேஷம் போடுகிறீர்கள் என்று உங்களிடம் அவர்கள் சொல்லுவதில்லை. ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொள்வது நாகரீகமாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.
– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாம் கேட்பதை பெறுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோமா!

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போக நினைப்பது போல என்றொரு கருத்து நம் மத்தியில் உண்டு. இக்கருத்துக்குப் பதவிளக்கம் தேவையற்றது.

ஏனெனில் அக்கருத்து வெளிப்படையானது. ஆக, முதலில் நாம் எதை அடைய நினைக்கின்றோமோ, எமது இலக்கு எதுவாக இருக்கிறதோ அதற்கு ஏற்றாற்போல் எங்களின் தகைமைகளை, தகுதிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தவிர, இலக்கை அடைந்த பின்பு தகைமைகளை அடையலாம் என்று யாரேனும் கருதுவார்களாயின், அதைவிட்ட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஆம், தமிழ் மக்களாகிய நாம் எமது உரிமைக்காகப் போராடுகின்றோம். எங்கள் உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டுமாயின், அதற்குரிய அதிகாரங்கள் எங்களிடம் இருக்க வேண்டும் எனக் கூறுகின்றோம்.

அதேவேளை அந்த அதிகாரங்கள் எமது கைக்குக் கிடைக்கும்போது, அதனைக் கையாளுகின்ற நிர்வாக ஆற்றல் எம்பிடம் உள்ளதா? அதிகார விடயங்களில் எங்கள் இனம் சார்ந்து நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படத் தயாராக இருக்கின்றோமா?

அதிலும் குறிப்பாக பொலிஸ் அதிகாரம் எங்களிடம் கிடைக்கும்போது குறித்த பொலிஸ் அதிகாரத்தைப் பொறுப்பேற்று நிர்வகிக்கக் கூடிய ஆளுமை எம் இளம் சமூகத்திடம் உண்டா? அதற்கேற்றாற்போல் எங்கள் இளம் சமூகத்தை வழிப்படுத்துகின்றோமா – வளப்படுத்துகின்றோமா? என்ற வினாக்களை நாம் கேட்டேயாக வேண்டும்.

இவ்வாறான கேள்விகளுக்கு மத்தியில் எங்கள் எதிர்கால அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு எங்களிடம் அரசியலில் ஈடுபடக்கூடிய இளைஞர் அணி உள்ளதா? அவ்வாறானதொரு இளைஞர் அணியை உருவாக்கி அவர்களுக்கு அரசியல் பாடம் போதிக்கப்படுகிறதா? என்ற கேள்விகளும் உண்டு.

இங்குதான் எங்களின் பலம் – பலயீனம் எவ்வாறாக இருக்கிறதென்பதைக் கண்டு கொள்ள முடியும்.

உண்மை. எங்கள் தமிழர் தாயகத்தில் நாமே நமக்குப் பகையாக இருக்கின்ற நிலைப்பாடுகள் அதிகம் உண்டு.

எங்களின் தெளிவற்ற அரசியல் எங்கள் இனத்தை இன்னமும் எழவிடாமலே தடுக்கிறது.

ஆம், வடக்கு கிழக்கில் ஆளுநர் பதவிகளுக்கு தமிழர்களை நியமிக்க வேண்டும் எனக் கோரினோம். ஆனால் அந்தத் தமிழ் ஆளுநர் யாராக இருக்க வேண்டும் என்பதைக் கூற மறந்தோம்.

இவையாவற்றுக்கும் மேலாக, எமக்குப் பின்பாகவும் எமது அரசியலை, நிர்வாகத்தை, தமிழ் இனத்தின் கலை கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் காத்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் அறவே இல்லாத சமகால நிலைமைகள் எங்கள் இனத்தின் சாபக்கேடாகத் தொடர்கிறது.

இதிலிருந்து நம் இனம் மீள்வதாயின் நாம் நடந்து வந்த பாதையை மீள்வாசிப்புக்குட்படுத்தி அதிலிருந்து புதிய அத்தியாயத்தை எழுத வேண்டும்.

அதுவொன்றுதான் எங்களுக்கான மீட்சியைப் பெற்றுத் தரும்.

# நிகழ்நிலை சட்டத்தை அமுலாக்கமுன் கட்சி தலைவர்கள் கூட்டத்தை நடத்துக

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றை நடத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

இந்த சட்டமூலத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்ட நிலையிலேயே, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா இந்தகோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு கடந்த 24 ஆம் திகதி 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், குறித்த சட்டமூலத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்த தாகஹர்ஷணராஜகருணா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரைவில் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகள் உள்ளடக்கப்படவில்லை என அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில், குறித்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அனுமதிக்கக் கூடாதென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கமைய, உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக கட்சித் தலைவர் கூட்டமொன்றை நடத்துமாறு ஹர்ஷண ராஜகருணா கோரியுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கமைய குறித்த சட்டமூலம் மாற்றியமைக்கப்படாமல் நடைமுறைப்படுத்தப்படக் கூடாதெனவும், அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டால் நீதித்துறை மற்றும் அரசியலமைப்புக்கிடையில் இது குழப்பங்களை தோற்றுவிக்குமெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## 4 கிலோ கஞ்சாவுடன் முறிகண்டியில் ஒருவர் கைது

(முறிகண்டி)

முறிகண்டியில் சுமார் 4 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து கஞ்சா பொதி கடத்தி செல்லப்படுவது தொடர்பில் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து புலனாய்வு பிரிவினரும், கிளிநொச்சி விசேட அதிரடிப் படையினரும் குறித்த வாகனம் ஒன்றை பின் தொடர்ந்த நிலையில் குறித்த வாகனம் முறிகண்டி பகுதியில் உள்ள வசந்த நகர் பிரதான வீதியில் திரும்பியுள்ளது.

குறித்த வாகனத்தை இடை மறித்து சோதனையிட்ட வேளை சாரதி உள்ளிட்ட இருவர் தப்பி சென்ற நிலையில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து விசேட அதிரடிப்படையினர் வாகனத்தை சோதனையிட்ட போது, சூட்சுமமாக மறைத்து எடுத்து செல்லப்பட்ட இரண்டு கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர்.

குறித்த பொதியில் காணப்பட்ட கஞ்சா சுமார் 4 கிலோ எடை கொண்டது என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த கஞ்சா பொதியையும், கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும், கைதான சந்தேகநபரையும் மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7,100)

## ஊரெழு மேற்கு பகுதியில் கசிப்புடன் பெண் கைது

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்கு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை கசிப்புடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் 10 லீற்றர் கசிப்புடனும் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## சாதனையாளர் கௌரவிப்பும் பொதுக்கூட்டமும்

தொல்புரம் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொது கூட்டமும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் சத்தியமனை நூலக அரங்கில் நிலைய தலைவர் நிஷாந் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடைந்த,தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சதுரங்கப்போட்டியில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான சி.கனகசிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபையின் சன சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி யூலியன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

## சிவனொளிபாதமலை யாத்திரிகர்களுக்கான விசேட பேருந்து சேவை

(கொழும்பு)

சிவனொளிபாதமலைக்கு செல்லும் யாத்திரிகர்களுக்காக விசேட அரச பேருந்து சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக பலாங்கொடை போக்குவரத்து சபை முகாமையாளர் தர்ம ஸ்ரீ ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த பேருந்து சேவையானது பலாங்கொடையில் இருந்து நல்லதண்ணி வரை இடம்பெறவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இந்த விசேட பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் படி, ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மாலை 4.30 க்கு பலாங்கொடையில் இருந்து புறப்படும் பேருந்து பொகவந்தலாவை வீதியின் ஊடாக நோர்வூட் பிரதான நகரத்தை தொடர்ந்து இரவு 8 மணிக்கு நல்லதண்ணியை சென்றடையும் எனவும் அறிவித்துள்ளார். (ம-7)

## மதுச்சாலைக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

மதுவரி செலுத்தத் தவறிய மதுபானசாலைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனுத்தாக்கலானது சமூக ஆர்வலர் சஞ்சய மஹவத்த உள்ளிட்ட குழுவினரால் செய்யப்பட்டுள்ளது.

வரி செலுத்தத் தவறிய மதுபானசாலைகளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்தவும், உரிய நிறுவனங்களிடம் இருந்து நிலுவைத் தொகையை வசூலிக்கவும் உத்தரவிடக் கோரி இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர், அதன் அதிகாரிகள், நிதியமைச்சின் செயலாளர், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் பலர் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# முதலிரு மேற்கத்துய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

09



நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் பழைய தோற்றம்

தற்போதைய நல்லூர்க் கந்தன் ஆலயம் பழைய இடத்தில் கட்டப் பட்டிருப்பதாகக் கூறமுடியாது. அவ்வாறு கூறக்கூடிய அளவிற்கு இலக்கிய ஆதாரங்களோ அன்றித் தொல்லியற் சான்றுகளோ காணப்படவில்லை என்று கூறப்படுகிறது. நல்லூரில் இருந்த நல்லூர்க் கந்தன் ஆரம்ப கால ஆலயமும் ஏனைய ஆலயங்களைப் போல் போர்த்துகேயரால் இடிக்கப்பட்டு விட்டது.

இவ்வாறு போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்ட பழைய கந்தசாமி கோயிலானது தற்போது முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் சிலைக்கு முன்புள்ள கிறிஸ்தவ ஆலயத்தை அண்டியுள்ள பகுதியில் இருந்துள்ளதென்பதற்குச் சில தொல்லியல் ஆதாரங்கள் உள்ளன என்று கூறப்படுகிறது. பொதுவாக கத்தோலிக்க மதம் பரப்பிய போர்த்துக்கேயர் இந்து ஆலயங்களை இடித்து அந்த அமைவிடங்களில் அல்லது அவற்றுக்கு அருகிலேயே தமது கத்தோலிக்க தேவாலயங்களை அமைத்திருக்கின்றனர். அதே போல் கந்தசாமி ஆலயம் இருந்த இடத்தில் அக்காலத்தில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றையும் அமைத்தனர். பின்னர் ஒல்லாந்தர் இதனைத் தாங்கள் சார்ந்த புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றினார்கள். இக்கோயில் முன்னர் இருந்த இடத்தை அடுத்து அரச அரண்களுக்குரிய சான்றுகள் இருந்ததால் இதை ஓர் அரச கோயிலாகவும் கருதுகின்றனர். போர்த்துக்கேயர் இக்கோயிலை இடிப்பதற்கு முன்னர் சிலகாலம் தமது பாதுகாப்பு அரணாகவும் இதனைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் இறுதி ஆண்டுகளில் இந்துக் கோயில்கள் அமைப்பது தொடர்பாக ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்தபோது நல்லூர் கந்தசுவாமி கோயில் மீள அமைக்கப்பட்டது. முன்னைய இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருந்தபடியால் இன்னொரு இடத்தில் கோயிலை அமைத்தார்கள். மடாலயம் போல் காட்சியளித்துக் கொண்டிருந்த இவ்வாலயத்தை, ஆகமம் சார்ந்த கிரியை முறைக்கும், சிற்ப சாத்திர விதிக்கமைந்த கட்டட முறைக்கும் மாற்றியமைத்து, இன்றைய நிலைக்குக் கொண்டுவர வித்திட்டவர் ஆறுமுக நாவலர் ஆவார்.

நல்லூர்க் கந்தன் ஆலயம் தற்போது இருக்கும் இடம்பற்றி பல்வேறுபட்ட கதைகள் மக்களிடையே உலாவுவதை நாங்கள் காணலாம். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை தற்போதுள்ள இடத்தில் கட்டுவதற்கு ஒல்லாந்த ஆட்சியாளர்கள் அனுமதிக்க இரண்டு காரணங்கள் இருந்துள்ளன என கூறப்படுகிறது. ஒன்று, நல்லூர் கோயில் இருந்த இடத்திலுள்ள கிறிஸ்தவ தேவா லயத்தை அந்த இடத்தில் வைத்திருக்கும் நோக்கம். இரண்டாவது, தமது வர்த்தகப் போட்டியாளராகவிருந்த முஸ்லிம்களைக் குருக்கள் வளவிலிருந்தும் அகற்றும் நோக்கம் ஆகும்.

மற்றொரு கதை குருக்கள் வளவில் அமைந்திருந்த யோகியாரொருவரின் சமாதிக்கு அருகில் இக்கோயில் நிறுவப்பட்டது என்றும், யோகியாரின் பெயர் சிக்கிந்தர் என்றும் கூறப்படுகிறது. இவரை அக்காலத்தில் வாழ்ந்த முஸ்லீம்களும் போற்றினர். இரு மத மக்களும் அவரை வழிபட்டனர். போர்த்துக்கேயருக்கும், தமிழ்ப்படை வீரர்களுக்கும் குருக்கள் வளவில் நிகழ்ந்த யுத்தத்தில் இவர் இறக்க நேர்ந்தது. குருக்கள் வளவுச் சுற்றாடலில் அக்காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் அந்த யோகியாருக்கு ஒரு சமாதி கட்டி வழிபட்டனர். மீள அமைக்கப்பட்ட கோயிலின் உள்வீதியில் இச்சமாதி அகப்பட்டபடியால் சமாதியை வழிபட முஸ்லிம்கள் அனுமதி கேட்டார்கள். அவர்கள் கலகம் செய்யாதிருக்கக் கோயிலின் மேற்கு வீதியில் வாயில் வைத்து அவர்கள் வணங்கிவர இடம் கொடுத்தனர் என்றும் கூறப்படுகிறது.

ஒல்லாந்தருடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் இந்து சமயம் தொடர்பான பிடிவாதம் தளர்ந்ததைத் தொடந்து முக்கியமான இந்துக் கோயில்கள் சில இன்றைய யாழ்ப்பாண நகரத்தின் எல்லைக்குள் அமைந்தன. இவ்வாறு கட்டப்பட்ட கோயில்கள் பிற்காலத்தில் யாழ்ப்பாணப்பகுதிகள் சைவசமயத்தவரின் பண்பாட்டு மையங்களாக உருவாக வழிவகுத்தது. செட்டிமாரால் கட்டப்பட்ட வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோயில், யாழ் பெருமாள் கோயில் என்பன இவற்றுள் முக்கியமானவை. இந்து சமயம் தொடர்பான ஒல்லாந்தருடைய பிடிவாதத் தளர்வினைத் தொடர்ந்து யாழ்ப்பாணப்பட்டினத்தில் கொட்டில் போல இலைமறைவிற் கிடந்த சில நூறு கோயில்களெல்லாம் வெளிப்படத் தொடங்கி பெருங்கோயில்களாக தற்போதுள்ளன.

### கண்டி இராச்சியத்தில் போர்த்துக்கேயர் அதிகாரத்தை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சி

சீதாவாக்கை இராசதானியின் வீழ்ச்சியுடன் கரையோரப் பிரதேசங்களின் பெரும்பகுதியில் போர்த்துக்கேயர் தமது அதிகாரத்தை நிலைநாட்டியதால் நாட்டின் சுயாதீனத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு கண்டி இராச்சியத்திற்கு ஏற்பட்டது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் தாக்குதல்களுக்கு முகங்கொடுத்து 1815 ஆம் ஆண்டு வரை தமது பொறுப்பை நிறைவேற்றக்கூடுமானதாக கண்டி இராச்சியத்தினால் இருந்தது. கண்டி இராச்சியத்தில் போர்த்துக் கேயர் தமது அதிகாரத்தை நிலை நாட்ட முயன்றமையையும் அதற்கு எதிராகக் கண்டி இராச்சியத்தின் செயற்பாடுகளையும் இப்போது பார்ப்போம்.

போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தின் அரசியலில் தலையிடும் காலகட்டத்திலேயே கண்டி இராச்சியத்தில் தமது அதிகாரத்தை நிலைநாட்டும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டனர். 1 ஆம் விமலதர்ம சூரியன் கண்டி இராச்சியத்தின் அரசனாவதற்கு முன்னர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றப் போர்த்துக்கேயர் மேற்கொண்ட முயற்சிகளில் தந்துறைப் போர் முக்கியமானதாகும்.

### தந்துறைப் போர்

போர்த்துக்கேயரின் கீழ் சிறிது காலம் இருந்து, அவர்களது யுத்த முறைகளையும் ஏனைய உபாயங்களையும் நன்கு அறிந்து கொண்ட கோணப்பு பண்டாரன் விமலதர்மசூரியன் என்ற பெயரில் கண்டி இராச்சியத்தின் அரசனாகியதைப் போர்த்துக்கேயர் விரும்பவில்லை. இதனால் போர்த்துக்கேயரின் பாதுகாவலை நாடியிருந்த கரலியத்த பண்டாரவின் மகளான குசுமாசன தேவியைக் (தோனா கத ரீனா) கண்டி இராச்சிய சிம்மாசனத்தில் அமர்த்தித் தாம் விரும்பியபடி ஆட்சிசெய்ய போர்த்துக்கேயர் விரும்பினர்.

1594 ஆம் ஆண்டு போர்த்துக்கேயத் தளபதியான (கப்பித்தான் ஜெனரல்) பெரோ லோபேஸ்த சூசா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பில் அவர்களால் குசுமாசன தேவியைக் கண்டி இராச்சிய அரசியாக நியமிக்கக் கூடியதாக இருந்தது. எனினும் வெளிநாட்டவரால் நியமிக்கப்பட்ட அரசியை ஏற்றுக்கொள்ள மறுத்த கண்டி இராச்சிய மக்கள், 1 ஆம் விமலதர்மசூரியனுக்கு ஆதரவு வழங்கினர். இதனால் பெரோ லோபேஸ் த சூசா தனது படையுடன் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

1594 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தந்துறையில் போர்த்துக்கேயப் படைக்கும், கண்டி இராச்சியப் படைக்கும் இடையில் பெரும் போர் ஏற்பட்டது. இந்தப் போரில் போர்த்துக்கேயப் படை பெரோ லோபேஸ் படுதோல்வியடைந்ததுடன் த சூசாவும் கொல்லப்பட்டான்.

குசுமாசனதேவி கண்டி மக்களால் சிறைப்பிடிக்கப்பட்டதுடன், விமலதர்மசூரியன் அவளைத் திருமணம் செய்து கொண்டான். இந்த விவாகத்தினால் கண்டி இராச்சியத்தில் புதிய அரச வம்சம் தோன்றியது. கண்டி இராச்சியத்தில் தமக்குச் சாதகமான ஆட்சியை நிறுவ வேண்டுமென்ற போர்த்துக்கேயரது முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

விமலதர்ம சூரியனின் போர்த்தந்திரங்களும் கண்டி இராச்சிய மக்களின் ஆதரவு மன்னனுக்குக் கிடைத்தமையும், போர்த்துக்கேயரின் உதவிக்குக் கரையோரப் பகுதியிலிருந்து சென்ற சுதேசப் படை கண்டி இராச்சியப் படையுடன் சேர்ந்து கொண்டமையும் விமலதர்ம சூரியனின் வெற்றிக்குக் காரணங்களாயின.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை...

இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

நெல்லு வெட்டும் இயந்திரத்தினை ஏற்றிவந்த உழவு இயந்திரமும் சிறிய ரக பட்டா வாகனமும் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் பட்டா வாகனத்தில் பயணித்த சுதந்திரபுரம் பகுதியினைச் சேர்ந்த நவீன் என்ற இளைஞன் படுகாயம் அடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளை உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் நெல்லு வெட்டும் இயந்திரத்தினை ஏற்றி சென்ற உழவு இயந்திரத்தின் சாரதியினை கைது செய்துள்ளனர். (ம-7,299)

## 12 இந்திய...

விக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் பன்னிருவரையும் ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் முன்னிலைப்படுத்தினர். மீனவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும், தலா ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை என்ற ரீதியில், ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத் தண்டனை விதித்து நீதவான் உத்தரவிட்டார்.

காரைநகர் கடற்பரப்பில் 3 மீன்பிடி படகுகளுடன் மீனவர்கள் பன்னிருவரும் கடந்த 13ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர். (ம-7)

## ஜனாதிபதித்...

நேர்காணல் ஒன்றின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான எந்தவொரு சாத்தியக்கூறுகளும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஜனாதிபதித் தேர்தலானது எந்தவொரு சந்தரப்பத்திலும் பிற்போடப்படமாட்டாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7)

## எம்முடன்...

துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய தலைவராக பதவியேற்றதன் பின்னர் சிவஞானம் சிறீதரன் ஐக்கியத்தைப் பற்றி பிரஸ்தாபித்திருப்பதை வரவேற்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினராகிய நாம், இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் எம்முடன் இணைந்து பயணிக்க முன்வர வேண்டும் என்றும் வேண்டுகிறோம்.

2002ஆம் ஆண்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோதும் அதனைப் பதிவு செய்ய வேண்டும் என்று அதில் அங்கம் வகித்த பல கட்சிகள் தொடர்ந்தும் கோரிக்கைகளை வைத்தபோதும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி அதற்கு செவிசாய்க்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22 வருட காலமாக தமிழ் மக்களுக்காக போராடும் ஒரு அரசியல் கட்சியாக தன்னை நிறுவனப்படுத்திக் கொள்ளாமல், தேர்தல் காலங்களில் கூட்டாகவும் பின்னர் இலங்கை தமிழ் அரசுக் கட்சியாக முடிவெடுத்துச் செயற்படுவதுமே இன்று வரை தொடர்கின்றது. இதன் காரணமாகவே இடைப்பட்ட காலங்களில் பல கட்சிகளும் அதிலிருந்து வெளியேறின.

இந்த நிலையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோரை ஒன்றிணைத்து 2009ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஊடகங்களினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தமிழ் தேசியப் பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும் ஒரு வலுவான அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் தீர்க்கமான சிந்தனையுடன் பயணிக்கின்றது. இதன் அடிப்படையில்தான் ஒரு வருடத்திற்கு முன்பாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி உருவாக்கப்பட்டு, அது இன்று வரை தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புதிய புதிய அமைப்புகள் தொடர்பாக சிந்திப்பதை விடுத்து, ஏற்கெனவே செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஐக்கிய முன்னணியில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஏனைய கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்று விரும்புகிறோம் என தெரிவித்துள்ளார். (ம-7)

## சிறீதரன்...

முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டைப் பிளவுபடுத்தமாட்டோம் என்ற உறுதிமொழியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் மீண்டும் பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். இது தொடர்பில் சரத் வீரசேகர மேலும் கூறியதாவது,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், உடனே கிளி நொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று, மரணித்த விடுதலைப் புலிகளுக்கு மலர் தூவி நினைவேந்தல் நடத்தியுள்ளார்.

இந்த நாட்டைப் பிளவுபடுத்தவே விடுதலைப் புலிகள் போராடினர். எனவே, சிறீதரன் எம்.பி. அந்தப் பயங்கரவாதிகள் மரணித்த இடத்துக்குச் சென்று மலர் வைத்து நினைவேந்தல் நடத்துகின்றார் எனில் அவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நாட்டைப் பிளவுபடுத்தும் நிலைப் பாட்டிலேயே உள்ளனர் என்பதையே புலப்படுத்துகின்றது.

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையிலான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் சிறீதரன் எம்.பி., எவ்வாறு மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று, விடு தலைப் புலிகளைக் கௌரவித்து நினைவேந்தல் நடத்த முடியும்? நாட்டைப் பிளவுபடுத்தும் நிலைப்பாட்டில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளனர். எனவே, நாட்டைப் பிளவுபடுத்தமாட்டோம் என்ற உறுதிமொழியை அவர்களிடம் மீளப் பெற வேண்டும்" என்றார். (ம-7)

## பாராளுமன்ற...

மாதம் 7ஆம் திகதி மீண்டும் புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பாராளுமன்ற கூட்டத்தொடர் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழு உள்ளிட்ட பல பாராளுமன்ற குழுக்கள் கலைக்கப்படும்.

புதிய கூட்டத் தொடரின் பின்னர், ஜனாதிபதியினால் அதற்கான உறுப்பினர் நியமனம் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 0197
J 6 2 9 4 9 9 J
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1401
N 05 12 42 73 N
54162

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3613
சீட்டிழுப்பு திகதி 26.01.2024
V 03 08 10 64
V 67393
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 0680
மிதுனம் 18 27 44 45 மிதுனம்
15267 07

மஹஜன சம்பத
திகதி 2024/01/26
சீட்டிழுப்பு இலக்கம் 5371
A 8 5 9 7 8 0
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1719
Y 04 42 49 57 73
97396

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
26.01.2024 வெற்றி வாரம் 079
Y 2 5 1 2 8 5
59410
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,290,279.20
DLB
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2345
வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.26
தினம் வெள்ளிக்கிழமை
27 54 64 65 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,174,092.00
93078

சனிதா
திகதி 2024.01.26 வெற்றி வாரம் 4506
23 39 45 65 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,295,359.20
28182
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 433
சீட்டிழுப்பு திகதி 2024.01.26
பச்சை
வெற்றி இலக்கங்கள் 22 35 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,854,800/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4057
வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.26
தினம் வெள்ளிக்கிழமை
30 37 41 60 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,549,248.00
190478

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 03 11 26 42 53
1521
26.01.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 497,885,886.20
DLB
தொலை பேசி: 011-2 333 546-47

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2171
சீட்டிழுப்பு திகதி: 2024.01.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,542,152/-
அட கோடிபதி ADA KOTIPATHI
02 14 40 50 X
453190


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல் அறுவடையாளர்களுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட நெல் சூடடிக்கும் இயந்திரம் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். மணித்தியாலத்திற்கு 2 தொன் நெற்கதிர் அடிக்கக் கூடியதும் டிராக்டரில் பொருத்தி இயக்கக் கூடியதுமானது.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



ஆர்க்.என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாள் 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

(18765)

## விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.



Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

077 038 5584

(18785)

## வேலையாட்கள் தேவை

கிரைண்டிங் மில்லுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

சம்பளம் 2500/= இற்கு மேல்

077 936 1356

(18784)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## விற்பனைக்கு

அராலி செட்டியார் மடம் வட்டுக்கோட்டையில் மெயின் றோட்டில் இருந்து இரண்டாவது காணி நல்லறிலையில் உள்ள வீடு காணி 1 1/4 பரப்பில் உள்ளது. (விலை 600,0000/=)

076 768 7641

(18762)

## Visa

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.



Visitor Visa

வெளிநாடுகளில் உறவினர் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

Minor education - Canada ( 7 - 17 Years )

Visa Consultant

134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

070 375 0002

(18785)

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப் பிரிவு

இலவச செயன்முறை வகுப்பு

பொறியியல் தொழினுட்பம்

திகதி - தை 29,30,31 மற்றும் 01 மாசி 2024

நேரம் - காலை 8.30 தொடக்கம் 12.00 வரை

நவீன ஆய்வுகூட வசதிகள் மற்றும் அனுபவம் மிக்க ஆசிரியர் குழாம்

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

Phone No : 077 017 5346

(C-8211)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு காணி A9 வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

வட மாகாண சபை 300 மீற்றர்

கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

076 788 0591 | 077 129 4999

(18771)

## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas

Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8218)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி நகரிலிருந்து 500m தொலைவில் (union camp அருகாமையில்) இராச வீதியில் அமைந்துள்ள 6 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. குடி மனைகள் அமைக்க ஏற்றது. இவ்விரண்டு பரப்புக்களாகவும் விற்கப்படும். (மாலை 3.30 க்கு பின்னர் தொடர்பு கொள்ளவும்)

(18758)

076 123 9673

## கார், வான் விற்பனைக்கு

கார் மற்றும் GN - XXXX நிசான் செரினா, மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

076 748 3028
077 255 7761

(18733)

## காணி விற்பனைக்கு

புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணி துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

**1 பரப்பு - 3 இலட்சம்**

மேலதிக விபரங்களுக்கு

(18773)

074 260 0617
077 612 2971

## கடை வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ராமநாதன் வீதி முகப்புடன் ஆறு கடை(6) வாடகைக்கு உண்டு. 78 அடி நீளம் 12 அடி அகலம் கொண்ட கடைகள் ஐந்து வருட(5) காலப் பகுதிக்கு வாடகைக்கு வழங்க முடியும். அட்வான்ஸ், வாடகை நேரில் பேசிக் கெள்ளலாம்.

தொடர்புகளுக்கு :

077 468 3354

(18770)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | 282 /= | | |
| 1 Kg கோதுமை மா | 183 /= | | |
| 1 Kg Prima கோதுமை | 189 /= | | |
| 1 Kg றவை | 285 /= | | |
| 1 Kg அரிசி மா | 199 /= | | |
| 1 Kg சம்பா அரிசி | 230 /= | | Max 3Kg |
| 1 Kg பெரிய கடலை | 640 /= | | |
| 1 Kg சோயா | 499 /= | | |
| 01 Supiri ரின்மீன் | 490 /= | ~~850/=~~ | |
| 180ml Sunsilk சம்போ | 440 /= | ~~480/=~~ | |
| 01 Sunlight soap | 140 /= | ~~150/=~~ | |
| 1.2 Kg Sunlight rose powder | 399 /= | ~~450/=~~ | |
| 350g Anchor plus | 1129 /= | ~~1190/=~~ | |
| 01 சந்தூர் சவர்க்காரம் | 140 /= | ~~175/=~~ | |

1040/=



~~1110/=~~

Max - 02

(18782)

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket 0777 8080 30

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.12.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப குல விளக்கு

**அமரர் தனுஷா கணேசமூர்த்தி**

அவர்களினது அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 26.01.2024 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை அவர்களது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் கோவிலடி, கொடிகாமம்.

077 294 9107

(C-8215)

இங்ஙனம் குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினால் இல.197, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org